



# ஈக்காடு கண்டிகை ஊராட்சி

## உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் (திட்டமில்லாத பகுதி)

| | |
|---|---|
| மாவட்டம் | : திருவள்ளூர் |
| வட்டம் | : திருவள்ளூர் |
| உள்ளாட்சி | : ஈக்காடு கண்டிகை |
| கிராமம் | : ஈக்காடு கண்டிகை |
| நில அளவை எண்கள் | : **218; 219; 220; 221/1A, 221/1B, 221/1C, 221/2; 222; 223; 967/2, 967/3, 968/2** மற்றும் **970/2** |
| அளவு | : 1 : 400 |
| இணையதள விண்ணப்ப எண் | : OEO13NNS/2024/TCP |

**குறிப்பு**

| | |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | : 33600.0 ச.மீ. (8.30 ஏக்கர்) |
| மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு | : 10955.0 ச.மீ. |
| சாலையின் பரப்பு போக மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | : 22645.0 ச.மீ. |
| கோரிய மனைகள் | : 212 |
| ஒதுக்கிய மனைகள் | : 197 (EWS மனைகள்: 92-99, 102-108, 121-131, 134-144, மற்றும் 176, 177) |
| EWS மனைகள் பரப்பு | : 2277.0 ச.மீ (10.05%) |

மனைப்பிரிவு இடத்தின் எல்லை........................................................................

நிலையிலுள்ள சாலை........................................................................

உத்தேச மனைப்பிரிவு சாலை........................................................................

**A.பொது ஒதுக்கீடுகள்.**

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

1. மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு : 10955.00 ச.மீ
2. பூங்கா-1 பரப்பளவு : 1697.70 ச.மீ
   பூங்கா-2 பரப்பளவு : 574.80 ச.மீ
   பூங்காவின் மொத்த பரப்பளவு : 2272.50 ச.மீ (10.03%)

**B.பொது உபயோகம்: TNCD&BR 2019, 47(8) - ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டவை.**

1. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட மனைப்பரப்பு : 117.50 ச.மீ (0.51%)
2. TANGEDCO ஒப்படைக்கப்பட்ட மனைப்பரப்பு : 118.20 ச.மீ (0.52%)

கட்டிட வரம்பு : 7.20மீ அகல சாலைகளுக்கு - 1.5மீ,

மூலை முடக்கு : 7.2மீ முதல் 12.0மீ அகல சாலைகள் வரை - 1.5மீ x 1.5மீ,

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:04.02.2019-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:31.01.2020-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. அரசாணை எண்.181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி ந.வ.4(1) துறை, நாள்:09.12.2020-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
4. இம்மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் ஒப்புதலளிக்கும் முன் இடத்தில் எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி நிர்வாக அதிகாரி உறுதி செய்துகொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் இரத்து செய்யப்படும்.
6. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரிலுள்ள உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், பொது அதிகார பத்திரம், குத்தகை பத்திரம், தானபத்திரம், பட்டா மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொறுத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொறுத்தமான அமைப்பு அல்ல.
8. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டடம் கட்டப்படவேண்டும்.
9. இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்பந்தப்பட்ட இடத்தில் 6’x4’ என்ற அளவுக்குக் குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகிலுள்ள இடத்திற்கு செல்லும் வரைப்படத்தில் காண்ப்பிக்கப்பட்டுள்ளவாறு மனைப்பிரிவின் சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்படல் வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO / UE) வட்டார வளர்ச்சி அலுவலர் / பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. குறைந்த வருவாய் பிரிவினருக்களுக்கான EWS மனைகள்.92-99, 102-108, 121-131, 134-144, மற்றும் 176, 177 வரையிலான மனைகளை மனை உட்பிரிவு / மனை உபயோக மாற்றம் / மனை உபயோக இணைப்பு செய்தல் கூடாது.
14. மனையிடத்தின் ஊடே செல்லும் நீர் வழிப்பாதையினை தடைகள் ஏதும் ஏற்படாதவாறு மனைப்பிரிவின் உத்தேச சாலைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்பட வேண்டும்.
15. வட்டாச்சியர், திருவள்ளூர் அவர்களின் அணுகு சாலைக்கான தடையின்மை சான்று கடிதம் ந.க.எண்:288/2024/அ1 நாள்.30.12.2024

**APPROVAL NO: SWP/DTCP/TVLR/LAYOUT No: 09/2025**

வ

Signature Not Verified

ச.இளவரசன்
அளவர்/உதவிவரைவாளர்

மு.ச.இலட்சுமணன்
வரைவாளர் நிலை-III

சு.பானுமதி
மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்